17

# நகர் ஊரமைப்பு துணை இயக்குனர்,(பொறுப்பு), தஞ்சாவூர் மண்டலம், தஞ்சாவூர் அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை:- திரு.சு.சங்கரமூர்த்தி,பி.இ.,

நடவடிக்கை கடிதம் எண்: **792/2018/தம3** நாள்: **25.04.2018**

பொருள்: அனுமதியற்ற மனைப்பிரிவு வரன்முறைப்படுத்துதல் - நகர் ஊரமைப்பு துணை இயக்குனர் அலுவலகம், தஞ்சாவூர் மண்டலம் - நாகப்பட்டினம் மாவட்டம் - மயிலாடுதுறை வட்டம் மற்றும் ஊராட்சி ஒன்றியம் - வெள்ளாலாகரம் ஊராட்சி மற்றும் கிராமம் - நி.அ.எண்கள்: **170/1, 170/4pt, 171/6B,7, 172/1Bpt-ல்** 151543.00ச.அடி பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவுக்கு கொள்கையளவில் ஒப்புதல் அளித்து உத்தரவிடப்படுகிறது.

பார்வை:
1. அரசாணை எண்: 78, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள்: 04.05.2017
2. அரசாணை எண்: 172, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள்: 13.10.2017
3. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் வழிக்காட்டி நெறிமுறை ந.க.எண்: 13193/2017/LA2 நாள்: 30.10.2017, 31.10.17, 07.11.17, 17.11.17 மற்றும் 20.12.17
4. மனுதாரர் திரு.R.சஜ்ஜல், அவர்களின் விண்ணப்பம் நாள்: 14.03.2018

---

உத்தரவு:-

பார்வை (1) மற்றும் (2)ல் கண்ட அரசாணையின் படியும் பார்வை (3)ல் கண்ட வழிகாட்டி நெறிமுறைகளின் படியும் பார்வை (4)ல் கண்ட கடிதத்துடன் பெறப்பட்ட உத்தேசம் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணும் உத்தரவு வழங்கப்படுகிறது.

நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறை வட்டம் மற்றும் ஊராட்சி ஒன்றியம், வெள்ளாலாகரம் ஊராட்சி மற்றும் கிராமம், நி.அ.எண்கள்: **170/1, 170/4pt, 171/6B,7, 172/1Bpt-ல்** 151543.00ச.அடி பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு **கொ.ஒ.ம.வ./ந.ஊ.து.இ.(த.ம)எண்: 257/2018** என எண்ணிடப்பட்டு, கீழ்க்காணும் நிபந்தனைகளுடன் கொள்கையளவிலான ஒப்புதல் வழங்கப்படுகிறது.

மனைப்பிரிவின் மொத்தப் பரப்பு: 151543.00 ச.அடி

விற்கப்பட்ட மனைகளின் எண்ணிக்கை: 28

விற்கப்பட்ட மனை எண்கள்: 3-12, 14, 15, 24, 27-36, 38, 41, 47

விற்கப்படாத மனைகளின் எண்ணிக்கை: 19

விற்கப்படாத மனைகளின் எண்கள்: 1,2,13,16-23,25,26,37,39,40,42-46

விற்கப்படாத மனைகளின் மொத்த பரப்பளவு: 45141.00ச.அடி

திறவெளி ஒதுக்கீடு (OSR) இடத்தின் பரப்பு: 4635.00ச.அடி (10.27%)

K.S. Kumar

For SRINIVASA FOUNDATION

K.S. Kumar

..2..

<u>செலுத்தப்பட வேண்டிய கட்டண விவரம்:</u>

1) <u>பரிசீலனைக் கட்டணம்:</u>

| | |
|---|---|
| இணையதளம் வாயிலாக மனை ஒன்றிற்கு ரூ.500/- வீதம் பரிசீலனைக் கட்டணம் செலுத்திய மனை எண்களின் விவரம் | மனை எண்: 1,2,13,16-23,25,26,37, 42-46-ற்கு மட்டும் இணையதளம் மூலம் செலுத்தப்பட்டுள்ளது. |

பரிசீலனைக் கட்டணம் செலுத்தப்படாத மனைகளுக்கு அக்கட்டணத்தை இணையதளம் வாயிலாக செலுத்த வேண்டும்.

2) <u>வரன்முறைப்படுத்தும் கட்டணம் மற்றும் வளர்ச்சிக் கட்டணம்:</u> (உதாரணமாக)

| மனை எண் | பரப்பளவு (ச.மீ) | வரன்முறைப்படுத்தும் கட்டணம் (ஒரு சதுர மீட்டருக்கு 30 ரூபாய் வீதம்) (ரூபாயில்) | வளர்ச்சிக் கட்டணம் (ஒரு சதுர மீட்டருக்கு 25 ரூபாய் வீதம்) (ரூபாயில்) |
|---|---|---|---|
| 21 | 222.96 | 222.96 X 30 = ரூ.6689/- | 222.96 X 25 = ரூ.5574/- |

மேற்காண் வரன்முறைப்படுத்தும் கட்டணம் மற்றும் வளர்ச்சிக் கட்டணம் இணையதளம் வாயிலாகவும் அல்லது கீழ்க்கண்டவாறு நேரிலும் செலுத்தலாம்.

அ) வரன்முறைப்படுத்தும் கட்டணம் செலுத்துவதற்கான அரசு கணக்குத் தலைப்பு:

| | |
|---|---|
| **0217 Urban Development**<br>**60 Other Urban Development Schemes**<br>**800 Other Receipts**<br>**AT Receipts under Regularization Charges of Unapproved Layouts and Plots –DTCP**<br>**(DPC: 0217 60 800 AT 0007)** | சலான் மூலம் அரசு கருவூலத்தில் செலுத்தலாம். |

ஆ) வளர்ச்சிக் கட்டணம் கீழ்க்காண் உள்ளாட்சியின் வங்கிக் கணக்கில் நேரில் செலுத்தலாம்.

வங்கியின் பெயர் மற்றும் கணக்கு எண் ஆகியவற்றினை சம்பந்தப்பட்ட உள்ளாட்சியிடம் விவரம் பெற்றுக்கொள்ளுமாறு தெரிவிக்கப்படுகிறது.

மேற்காணும் கட்டணங்களை செலுத்திய பின்னரே சம்பந்தப்பட்ட மனைகளுக்கு உள்ளாட்சியால் வரன்முறை ஆணை வழங்கப்பட வேண்டும். விற்கப்படாத மனைகளைப் பொறுத்தமட்டில் அனைத்து மனைகளுக்கு அல்லது பகுதி மனைகளுக்கு மட்டும் கட்டணத்தை செலுத்தி சம்பந்தப்பட்ட மனைகளுக்கான வரன்முறை ஆணையைப் பெற்றுக் கொள்ளலாம்.

பார்வை (1) மற்றும் (2)ல் சுட்டிய அரசாணைகளின் படி மேற்காண் கட்டணம் தவிர வேறு கட்டணம் ஏதும் உள்ளாட்சி வசூலித்தல் கூடாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

K. Sd kum

நிபந்தனைகள்:

1. அரசாணை (நிலை) எண்: 172, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள்: 13.10.2017-ல் விதி எண்:7(g)(ii)-ன் படி மனைப்பிரிவு வரைபடத்தில் உள்ளவாறு சாலைகள் மற்றும் திறந்தவெளி ஒதுக்கீடு (OSR) இடங்கள் சம்பந்தப்பட்ட உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டதாக கருதப்படும்.

2. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலணைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவிற்கு கொள்கையளவிலான ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட கொள்கையளவிலான ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பின்றி ரத்து செய்யப்படும்.

கொள்கையளவிலான ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம் இரண்டு நகல்கள் மேல்நடவடிக்கைகாக இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது.

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்,(பொறுப்பு).,
தஞ்சாவூர் மண்டலம், தஞ்சாவூர்.
25/4/18

இணைப்பு:
மனைப்பிரிவு வரைபடம் இரண்டு தொகுப்புகள்

பெறுநர்:
வட்டார வளர்ச்சி அலுவலர்,
மயிலாடுதுறை ஊராட்சி ஒன்றியம்,
மயிலாடுதுறை வட்டம்,
நாகப்பட்டினம் மாவட்டம்.

நகல்:

1) திரு.R.சஜ்ஜல்,
நெ.61, துர்காலயா தெரு,
திருவாரூர்,
திருவாரூர் மாவட்டம் - 614001.

2) உதவி இயக்குநர்,
நில அளவை பதிவேடு துறை,
மாவட்ட ஆட்சியரகம்,
நாகப்பட்டினம் மாவட்டம்.

3) வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
மயிலாடுதுறை வட்டம்,
நாகப்பட்டினம் மாவட்டம்.

(2, 3) சாலை மற்றும் OSR பகுதியினை உள்ளாட்சியின் பெயரில் வருவாய் ஆவணங்களில் உட்பிரிவு செய்யும் பொருட்டு (வரைபடம் ஒரு தொகுப்பு).

4) மாவட்ட பதிவாளர்,
மாவட்ட பதிவாளர் அலுவலகம்,
மயிலாடுதுறை,
நாகப்பட்டினம் மாவட்டம்.

(4) சாலை மற்றும் OSR பகுதியினை உள்ளாட்சியின் பெயரில் பதிவு செய்யும் பொருட்டு (வரைபடம் ஒரு தொகுப்பு).

5) தொழில்நுட்ப வைப்பறை — ஒரு வரைபட தொகுப்பு

K. Sekkum

மயிலாடுதுறை வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊ) அவர்களின் செயல்முறைகள்
முன்னிலை: திருமதி.ஜெ.விஜயலெட்சுமி.,

21

ந.க.எண்: 06/2018/ஆ1 நாள்:6 12.2018

பொருள்: மனை வரன்முறை -மயிலாடுதுறை வட்டாரம் - வள்ளாலகரம் ஊராட்சி -நில சர்வே எண்:170/1,170/4,pt 171/6B,7 172/1,B pt-ல் 151543.00 ச.அடி பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு கொள்கை அளவில் ஒப்புதல்அளித்து வரப்பெற்றது வரன்முறை செய்து உத்திரவிடல்-சார்பு.

பார்வை : 1.நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், தஞ்சாவூர் அவர்களின் நடவடிக்கைகள் ந.க.எண்: 792/2018தம 3 நாள்: 25.04.2018
2.அரசாணை எண்: 78 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நாள்: 04.05.2017.
3.அரசாணை எண்: 172, வீடு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை நாள்:13.10.2017.
4.உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) நாகப்பட்டினம் அவர்களின் அவர்களின் ஆய்வு கூட்ட நாள்: நாள்:05.06.2018
5.திரு.சஜ்ஜல் நெ.61 துர்காலயா தெரு, திருவாரூர் மாவட்டம்.அவர்கள்விண்ணப்பம் நாள்: 14.03.2018.
6.ஊராட்சி தீர்மான எண்: 410/நாள்: 03.12.2018.

❂❂❂

உத்தரவு:

நாகப்பட்டினம் மாவட்டம் மயிலாடுதுறை,வட்டாரம் வள்ளாலகரம்ஊராட்சி சர்வேஎண்:170/1,170/4,pt171/6B,7172/1,Bptல்151543.00ச.அடிபரப்பளவில் அமைந்துள்ளஅங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவை முறைப்படுத்தி பார்வை 1-ல் கண்டுள்ள நகர ஊரமைப்பு துணை இயக்குநர் தஞ்சாவூர் மண்டலம் அவர்களின் செயலாணையில் கொள்கை அளவில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட மனைப்பிரிவில் 45141.00ச.அடி பரப்பளவில் கட்டணங்கள் கீழ்க்கண்டவாறு பெறப்பட்டுள்ளது.

1.வரன்முறை கட்டணம் 45141.00 சதுர மீட்டருக்கு ரூ.30/-வீதம் ரூ.125811/- (ரூபாய் ஒரு இலட்சத்து இருபத்து ஐந்தாயிரத்து எண்ணூற்று பதினொன்று மட்டும்) மயிலாடுதுறை பாரத மாநில வங்கியில் 22.11.2018- செலுத்தப்பட்டுள்ளது.

2.வளர்ச்சி கட்டணம் 45141.00 சதுர மீட்டருக்கு ரூ.25/- வீதம் ரூ.104843/- (ரூபாய். ஒரு இலட்சத்து நான்காயிரத்து எண்ணூற்று நாற்பத்து மூன்று மட்டும்) (Special Officer Village Panchayat Fund vallagaram Panchayat) 12.11.2018 அன்று வங்கி வரைவோலையாக ஊராட்சியில் செலுத்தப்பட்டுள்ளது.

For SRINIVASA FOUNDATION
K. S. kum.
Partner

d/B1/Cover Ltr

மேற்படி கட்டணங்கள் யாவும் பெறப்பட்டதால், வள்ளாலகரம் சர்வே எண்:170/1,170/4,pt 171/6B,7 172/1,B pt-ல் 151543.00 ச.அடி நகர ஊரமைப்பு து இயக்குநர் தஞ்சாவூர் அவர்களால் ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவில் உ விற்பனை செய்யப்பட்ட மனை எண்கள்: 3-12,14,15,24,27-36,38,41,47 போ விற்கப்படாத மனைகளின் எண்கள் 1,2,13,16-23,25,26,37,39,40,42-46 மனை பிரிவில் உள்ள மனைகள் மட்டும் வரன்முறைப்படுத்தி இதன் மூல உத்தரவிடப்படுகிறது.

பார்வை 1-ல் குறிப்பிட்டுள்ள நகர ஊரமைப்பு துணை இயக்குநர் தஞ்சாவூ அவர்களின் செயலாணையில் உள்ள அனைத்து நிபந்தனைகளும் இதற்கு பொருந்தும்.

தனி அலுவலர் வள்ளாலகரம் ஊராட்சி/
வட்டாரவளர்ச்சி அலுவலர்(கி.ஊ),
மயிலாடுதுறை.
6/12/18

இணைப்பு: வரைபடம்.

பெறுநர்:
திரு. R.சஜ்ஜல்,
நெ.61துர்காலயா தெரு,
திருவாரூர்,மாவட்டம்.

நகல்: நகர ஊரமைப்பு துணை இயக்குநர்(பொறுப்பு) தஞ்சாவூர் மண்டலம்
நகல்: சார்பதிவாளர், நிலை-I மயிலாடுதுறை
} உத்தரவு நகல் மட்டும்

For SRINIVASA FOUNDATION
K. S. Kumar
Partner